# THE FUNDAMENTAL SET OF ELEMENTS of MUSIC

(CARNATIC.)

OFFICE OF ... MADRAS
5-NOV 1929

E. M. R. KRISHNAN.

1929
METUR.

Registered] [Copy right.

OFFICE OF THE REGISTR...
5 - NOV 1929
MADRAS

- Inscribed -

in

- - Memory - -

of

- My Beloved -

Miss DURUGA BAI

E. M. Rk.

N/F
N29

# முகவுரை.

சங்கீதம் என்பது உலகிலுள்ள மிக்க அரிய பொருட்களில் ஒன்று. இஃது சாகரத்தினும் பெரிது. இஃது திரவியத்தால் வாங்கி திரவியத்திற்கு விற்கக் கூடாதது. செல்வம் அழிினும் சங்கீதம் அழியாது. சங்கீதத்தை விரும்பா மானிடர் கிடையா. இஃது வெறுக்கப்படுவதும் அஸாத்தியம். அவ்விதம் வெறுப்போர் சகல துர்க்காரியங்களுக்குட்படுவோரே; இத்தகையோர் மானிடரே யல்லர். இதைக் குறித்து மற்றுமுள்ள விஷயங்களை ஷேக்ஸ்பியர் முதலியோர் வரைந்துள்ள காவியங்களில் காணலாம்.

இதை நான் என்மீது அளவற்ற, காதல் கொண்டு என் நிமித்தம் வரைய முடியா துன்பங்களுக்காளாகிய என் உபகாரி **துருக பாய்** என்னும் கன்னிகையின் ஞாபகமாக வரைந்துள்ளேன்.

இஃது சரளி வரிசைகளின் முதல் பாகத்தை மாத்திரம் உடையது.

இப்படிக்கு,
இ. மா. இராமகிருஷ்ணன்,
ஆசிரியன்.

மேட்டூர்
12-10-1929.

222856

NR
N29

# தாள விஷயம்.

(சுருக்கமாக)

சங்கீதத்தின் உடலானது ஸ்ருதி; உயிரானது லயம் (தாளம்)

**தாளம்:—7-வகை.**

ஒவ்வொரு வகையும் பஞ்ச ஜாதியை யுடையது.

**ஜாதி:—**

1. சதுரஸ்ரம்.........By Fours
2. திஸ்ரம்...........By Threes
3. மிஸ்ரம்............By Sevens
4. கண்டம்............By Fives
5. ஸங்கீரணம்.......By Nines

**காலம்:**—காலம் என்பது மாத்திரைகளை யுடையது.

**மாத்திரை:**—ஒரு விஞடியின் காலமே ஒரு மாத்திரை.

தாளம்.
- லகு......................அடித்து எண்ணுதல்.
- த்ருதம்.................அடித்து விடுதல்.
- அனுத்ருதம்.......அடித்தல்.

# மற்றவை.

மாத்திரைகளைக் குறிக்கும் எழுத்துக்கள்:—த, தி, கி, ட, க, ஜ, ணு, ரி, கு, மி, நம், தோம், குந், தீம், ஜ்யம், த்ளாங், க்ருத்தாங், தக்குகு, தீங்கிண, தாங்க்ரதோம், தருக, கிருண முதலியன.

## இராகம்.

இராகம் என்பது சங்கீதத்தின் அரியதொரு பாகம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில்:—1. இராகத்தின் மேற்சாயலை முதலில் காண்பித்தல் வேண்டும். 2. பிறகு மத்திய ஸ்தாயிலிருந்து ஒவ்வொரு ஸ்வரத்திலும் தங்கித் தங்கி ஏறி முடித்துப் பிறகு கீழ் ஸ்தாயின் ஒவ்வொரு ஸ்வரத்திலிருந்து படிப்படியாக வளர்த்தி மேல் ஸ்தாயின் கடைசி வரையிலும் சென்று அம் மேல் ஸ்தாயின் சட்சமத்தில் (—சவில்) நிறுத்துதல் வேண்டும். 3. கடைசியாக மேல் ஸ்தாய் கீழ் ஸ்தாய் ஸ்வரங்களை மாற்றி மாற்றியும், கலந்து கலந்தும், நின்று நின்றும், பாடி, முடிக்கும்பொழுது மேற்கொண்ட ஸ்ருதியுடன் இழைந்து முடித்தல் வேண்டும்.

## கீர்த்தனை.

கீர்த்தனை :—

- எடுப்பு......இராகச் சாயலைக் காண்பித்து ஸம, கால், அரை, முக்கால் முதலிய இடங்களில் எடுத்தல்.
- விரிப்பு......கீர்த்தனையின் பல்லவி, அனுபல்லவி, சாணம் முதலியவைகளை விரித்துப் பாடல்.
- முடிப்பு......ஸ்ருதியுடன் இழைந்து முடித்தல். இவ்வாறு முடிக்கும்பொழுது தாளத்தின் முக்தாயிம்பைக் கவனித்து முடித்தல் வேண்டும்.

மற்றுமுள்ள விஷயங்களைப்பற்றி விரிவாக மற்றொரு புஸ்தகத்தில் காணலாம்.

ஓம் :

# ஆதி தாளம்.

## (8 அட்சரங்கள்)

இச் சரளி வரிசையில் ஒவ்வொன்றையும் நான்கு காலங்களில் பாடுவது நலம்.

முதல் காலம்..........8 மாத்திரைகளை யுடையது.
இரண்டாம் காலம்...4 மாத்திரைகளை யுடையது.
மூன்றாம் காலம்........2 மாத்திரைகளை யுடையது.
நான்காம் காலம்......1 மாத்திரையை யுடையது.

1. (௧) ச , , , , , , , ரி , , , , , , ,
க , , , , , , , ம , , , , , , , ப̄ , , , , , , ,
த , , , , , , , நி , , , , , , , ச̄ , , , , , , ,
(௨) ச , , , ரி , , , க , , , ம , , , ப , , ,
த , , , நி , , , ச̄ , , ,
(௩) ச , ரி , க , ம , ப , த , நி , ச̄ ,
(௪) சரிகமபதநிச̄

ஆரம்பத்தில் எடுத்த காலத்தையுடைய தாளத்தையே வைத்துக்கொண்டு சொற்களை இரட்டித்து இரட்டித்து வரின் இந்நான்கு காலங்களும் நன்றாக விளங்கும்.

2. சரிகம சரிகம சரிகம பதநிச̄
ச̄நிதப ச̄நிதப ச̄நிதப மகரிச
3. சரிகம சரி சரி சரிகம பதநிச̄
ச̄நிதப ச̄நிச̄நி ச̄நிதப மகரிச
4. சரிகம பமகரி சரிகம பதநிச̄
ச̄நிதப மபதநி ச̄நிதப மகரிச
5. சரிகம பாபா சரிகம பதநிச̄
ச̄நிதப மாமா ச̄நிதப மகரிச

6. சரிகம பமதப சரிகம பதநிச
சநிதப மபகம சநிதப மகரிச
7. சரிகம பதமப சரிகம பதநிச
சநிதப மகபம சநிதப மகரிச
8. சரிகம பா சரி சரிகம பதநிச
சநிதப மா சநி சநிதப மகரிச
9. சரிகம ரிகமப கமபத பதநிச
சநிதப நிதபம தபமக மகரிச
10. சரிகம பாகம பா பா
கமபத நிதபம கமபக மகரிச
11. சாநித நீதப தாபம பாபா
கமபத நிதபம கமபக மகரிச
12. சசநித நிநிதப ததபம பாபா
கமபத நிதபம கமபக மகரிச
13. சரிகரி காகம பமபா தபதா
மபதப தநிதப மபதப மகரிச
14. சரிகம பதநிச சா சா
சநிதப மகரிச சாசா
15. சரிகம பதநிச சசசச சசசச
சநிதப மகரிச சசசச சசசச
16. சரிகம பதநிச சபசா
சநிதப மகரிச சபசா
17. சரிகம பதநிச சபசா
சநிதப மகரிச சபசா
18. ரிச கரி மக பம தப நித சநி ரிச
ரிச சநி நித தப பம மக கரி ரிச

ஜண்டை வரிசைகள், அலங்காரங்கள், ஸ்வர கதிகள், கீதங்கள் முதலியவைகளை இதன் தொடர்ச்சியில் (மற்றொரு புஸ்தகத்தில்) காணலாம்.

## சில குறிப்புகள் :—

மேற்கண்ட சரளியை 'மாய மாள கௌள' இராகத்தில் அப்பியசிப்பதே வழக்கம்.

### ஹார்மோனியம் (Harmonium) :—

வெ...ஸ்வரத்தை ஒலிக்கச் செய்யும் வெண்ணிறமுடைய அடை.

க...ஸ்வரத்தை ஒலிக்கச் செய்யும் கருநிறமுடைய அடை.

விரல்கள் சுலபமாகச் செல்லத் தகுந்த ஸ்ருதி 4-ம் அடை.

| ஸ்ருதி 4-ம் அடை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ச | ரி | க | ம | ப | த | நி | ச̄ |
| | வெ | க | வெ | க | வெ | க | வெ | வெ |

### புல்லாங்குழல் (Flute) :—

சாதாரணமாக 8 துளைகள் காணப்படும். இவைகளில் அவசியமானவை 7.

| ஸ்ருதி | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ச | ரி | க | ம | ப | த | நி | ச̄ |
| | இ2 | இ$1\frac{1}{2}$ | 0 | வ6 | இ5 | இ$4\frac{1}{2}$ | இ$2\frac{1}{2}$ | இ2 |

இ2....இடது பக்கத்திலிருந்து இரண்டு துளைகளை மூட வேண்டும்.

வ6....வலது பக்கத்திலிருந்து ஆறு துளைகளை மூட வேண்டும்.

0......பூஜ்யம்—அதாவது எல்லா துளைகளையும் திறக்க வேண்டும்.

புல்லாங்குழலைப் பிடிக்கும் விதம் முதலியவை இதன் தொடர்ச்சியில் காணப்படும்.

ஆங்கில ஸாரங்கி (Violin—பிடில்) :—

ஸ்ருதி செய்ய :—

| | |
|---|---|
| 1-ம் தந்தி | 2-ம் நரம்பு |
| ப | ச |
| 3-ம் நரம்பு | 4-ம் தந்தி |
| ப | ச |

ப ச :—கீழ்ஸ்தாய் பஞ்சமமும் சட்ஜமமும்.

மேற்கூறிய ஸ்வரங்களை அந்தந்த தந்திகள் ஒலிக்க வேண்டும். இவ்விதம் ஸ்ருதி சேர்த்த பிறகு அப்பியசித்தல் வேண்டும்.

ஜலதரங்கம் (Jalatharangham) :—

இதில் முக்கியமாய் வேண்டிய கிண்ணங்கள் 15. இவைகளில் ஸ்திர ஸ்வரங்கள் 5. ஆயின் இவ் வப்பியாசத்திற்கு மட்டும் வேண்டிய கிண்ணங்கள் 9. இவைகளில் ஸ்திர ஸ்வரங்கள் 3.

அப்பியாசம்.

- முதன் முறை :—வலது கையாலேயே அப்பியசித்தல்.
- இரண்டாம் முறை :—இடது கையாலேயே அப்பியசித்தல்.
- மூன்றாம் முறை :—இடது கை வலது கை இடது கை வலது கை இவ்வாறு கைகளை மாற்றி மாற்றி அப்பியசித்தல்.
- நான்காம் முறை :—ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் இரண்டு கைகளை உபயோகித்தல் வேண்டும். இதில் அநுஸ்வரம் ஏற்படும்.

22 26856

NR N29

இதைக் குறித்த விஷயங்களைப்பற்றி நிறைவாகவும் மற்றுமுள்ள வாத்தியங்களைப் பற்றியும் மிருதங்கம், "கஞ்சிரு", "கிடுகிட்டு", "தந்தி தாளம்" முதலியவைகளைப் பற்றியும் அவ்வவைகளுக்கென்று தனித்தனியே வெளியாகும் புஸ்தகங்களில் காணலாம்.

THE BRITANNIA PUBLICITY CO.,

MADRAS.